வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | மனைப்பொருளியல் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- *எல்லா வினாக்களுக்கும் விடை தருக.*
- *01 - 50 வரையான வினாக்களுக்கு விடையளிக்க புள்ளடித்தாள் பயன்படுத்துக)*

01) குறைந்த பருமனிலிருந்து கூடிய பருமன் வரை அல்லது கூடிய பருமனிலிருந்து குறைந்த பருமன் வரை மனைப்பொருட்கள், உபகரணங்கள் என்பவற்றை மனை அலங்காரத்தில் பயன்படுத்தும் காட்டுரு கோட்பாடு
(1) பெயர்வு சந்தம்
(2) மீண்டு வருதல் சந்தம்
(3) ஒழுங்குமுறை சந்தம்
(4) எதிரமைந்தல்
(5) ஆரை விரிப்புக் கோட்டு சந்தம்

02) மனையின் பகுதிகளில் ஆற்றப்படும் பல்வேறு செயற்பாடுகளை குறைந்த சிரமத்தில் உச்ச வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் மனையின் பகுதிகளை அருகருகே திட்டமிடப்பட்டிருத்தல் என்பது
(1) நெகிழும் தன்மை
(2) நடமாடல் வசதி
(3) பாதுகாப்பு
(4) கூட்டமைப்பு
(5) திசைமுகம்

03) வீடு ஒன்றை அமைக்கும் போது அதன் பாவு (உட்கூரை) பதிவாக காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளும் நடவடிக்கையில் தவறான கூற்று
(1) பாவிற்கு இளநிறம் பயன்படுத்தல்
(2) சுவருக்கு கடும்நிறம் பயன்படுத்தல்
(3) நிலைக்குத்து வடிவான திரைச்சீலையிடல்
(4) ஒளி உடுருவும் திரைச்சீலையிடல்
(5) பாவிற்கு கடும்நிறம் பயன்படுத்தல்

04) மலர் ஒழுங்கு தொடர்பாக மாணவர் முன்வைத்த சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் சரியான கூற்று
A - மலர் அலங்காரத்துக்கு மூவர்ணமலர் பயன்படுத்தப்படுமாயின் ஒரு நிறம் கூடுதலாகவும், 2ம் நிறம் மந்தமாகவும், 3ம் நிறம் சிறிதாகவும் பயன்படுத்த வேண்டும்.
B - படுக்கை அறைக்கு வெப்ப வர்ண மலர் ஒழுங்கு விருப்பை ஏற்படுத்தும்.
C - மலர் ஒழுங்கின் மூலம் ஒரு நிற இசைவை எளிதில் காட்ட முடியாது.
D - வரவேற்பறையில் குளிர் வர்ண மலரை முன்வைப்பதால் சுகமான மனநிலை ஏற்படுத்தலாம்.
(1) A, D (2) A, B, C (3) A, B (4) A, C (5) B, C

05) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றுக்கு திரைச்சீலை இடவேண்டிய முறை பற்றி மாணவி ஒருவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்

A - சிறிய ஜன்னலாயின் சிறிய திரைச்சீலையிடல் வேண்டும்.

B - பெரிய ஜன்னலாயின் பெரிய காட்டுரு கொண்ட திரைச்சீலையிடல் வேண்டும்.

C - வேலைப்பாடற்ற தளபாடம் இடப்பட்ட அறைக்கு காட்டுரு கொண்ட திரைச்சீலையிடல் வேண்டும்.





D - அறையின் நிறம், தளபாட நிறத்துக்கு திரைச்சீலை தெரிவுசெய்ய வேண்டிய அவசியமில்லை.

E - திரைச்சீலையின் அலங்காரத்தை அதிகரிக்க “பெல்மட்” பயன்படுத்தலாம்.

இவற்றுள் சரியான கூற்று

*(1)* A, B, C  *(2)* B, C, E  *(3)* B, C, D  *(4)* A, C, E  *(5)* D, A, B

06)

| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| **A** | **B** | **C** | **D** | **E** |

இவற்றுள் மதிய போசன விருந்தினர் மேசைக்கு உகந்த மலர் ஒழுங்கு எது?

*(1)* A  *(2)* B  *(3)* C  *(4)* D  *(5)* E

07) நிறங்களின் குணவியல்புகளில் நிறப்பெறுமானம் குறிப்பது

*(1)* இளம், கடும் தன்மை

*(2)* வெப்பமான, குளிர்மையான தன்மை

*(3)* பிரகாசமான, இருண்ட தன்மை

*(4)* அமைதியான, ஆரவாரமான தன்மை

*(5)* முன்னடையும், பின்னடையும் தன்மை

08) மாப்பொருள் உணவு கடும் குளிரேற்றியில் பேணும் போது கெட்டித் தன்மை அடைய காரணமான பதார்த்தம் எது?

*(1)* குளுக்கோசு  *(2)* அமைலோசு  *(3)* மோல்ரோசு

*(4)* இலக்டோசு  *(5)* தெத்ரின்

09) லினோலியிக்கமிலம் ஆனது ஒமேகா - 6 என அழைக்கப்படுவதற்கான காரணம்

*(1)* கொழுப்பமில கட்டமைப்பில் 3 வது அணு இரட்டைப் பிணைப்பை ஆக்குவதால்

*(2)* கொழுப்பமில கட்டமைப்பில் 6 வது அணுவில் இரட்டைப் பிணைப்பை ஆக்குவதால்

*(3)* கொழுப்பமில கட்டமைப்பில் 2 வது காபன் அணு இரட்டைப் பிணைப்பை ஆக்குவதால்

*(4)* கொழுப்பமில கட்டமைப்பில் 4 வது காபன் அணு இரட்டைப் பிணைப்பை ஆக்குவதால்

*(5)* கொழுப்பமில கட்டமைப்பில் 5 வது காபன் அணு இரட்டைப் பிணைப்பை ஆக்குவதால்

10) ஒமேகா - 3 அமிலங்களைக் கொண்ட உணவு மூலங்கள் அடங்கிய தொகுதி

*(1)* சூரை, சமன், கீரி

*(2)* சுறா, பாரை, நண்டு

*(3)* இரால், கணவாய், நண்டு

*(4)* மக்கரன், கௌிறு, முரல்

*(5)* சூரை, சாளை, விரலி

11) போசணை அட்டவணையில் புரதம், இரும்பு அளவுகள் அளக்கும் அலகு முறையே
(1) கிலோகிராம் ($kg$) , கிராம் ($g$)
(2) மில்லிகிராம் ($mg$) , கிராம் ($g$)
(3) லீற்றர் ($\ell$) , மில்லிலீற்றர் ($m\ell$)
(4) கிராம் ($g$) , மைக்றோகிராம் ($mg$)
(5) கிலோகிராம் ($kg$) , மில்லிகிராம் ($mg$)

12) உணவுக் கூம்பகத்தில் காணப்பட்ட உணவுத் தொகுதிகளின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளது.
A - தானியம், கிழங்கு மாப்பொருள் உணவு
B - இறைச்சி, மீன், முட்டை, அவரையினம்
C - பாலும் பாலுற்பத்தி
D - சீனியும் எண்ணெயும், கொழுப்பும்
E - மரக்கறிகளும், பழங்களும்
இவற்றை உணவுக் கூம்பின் கீழிலிருந்து மேலாக வரிசைப்படுத்தும் போது சரியான ஒழுங்கு
(1) A, B, C, D, E (2) A, C, B, E, D (3) E, D, C, B, A
(4) A, E, B, C, D (5) D, C, E, B, A

13) சுகதேகி ஒருவருக்கு விற்றமின் $A$ நாள் ஒன்றுக்கு நுகரும் அளவு கணிக்கும் போது கரற்றீன் (தாவர உணவு), 1 ரெட்டினோல் (விலங்குணவு) செறிவு வீதம்
(1) 6 : 1 (2) 2 : 4 (3) 3 : 6 (4) 4 : 3 (5) 5 : 2

14) போசணைப் பொருளின் அனுசேபத்திற்கு தேவையான துணை நொதியங்களின் தொகுப்பில் செயற்படும் $B$ தொகுதி விற்றமின்கள்
(1) தயமினும் பிரிடொக்சினும்
(2) ரைபோபிளேவினும் நயாசினும்
(3) அடிலின், பயோட்டின்
(4) போலிக்கசிட், இலாசிடோஸ்
(5) சையனோகொபலோமின், போலையின்

15) சிறுமீன்களின் போசணைப் பெறுமானம் பற்றிய தவறான கூற்று
(1) கல்சியம் பெருமளவில் உண்டு
(2) பொஸ்பரஸ், அயடீன் சிறியளவிலே காணப்படும்
(3) ஒமேகா - 3 கொழுப்பமிலம் உண்டு
(4) உயர்தர புரதம் கொண்டது
(5) உயர் உயிரியற் பெறுமானம் உள்ளது

16) உயர்குருதி அமுக்க நோயாளி ஒருவர் உணவில் செய்ய வேண்டிய மாற்றங்களில் தவறான கூற்று
(1) பொற்றாசியம் குறைவான உணவை உட்கொள்ளல்
(2) உப்புப் பாவனையைக் குறைத்தல்
(3) சீனி அடங்கிய உணவை தவிர்த்தல்
(4) மீன், மீனெண்ணெய் ஆகியவற்றை உணவாக உட்கொள்வது பொருத்தமானது
(5) தினமும் உடற்பயிற்சி செய்வது மிகப் பொருத்தமானது

17) ஆரோக்கியமான நிலையிலுள்ள வயது வந்த இலங்கை நபர் ஒருவரின் உடற்திணிவுச் சுட்டி ($BMI$) பெறுமானம்
(1) 18 (2) 24 (3) 26.5 (4) 30 (5) 32

18) பின்வருவனவற்றுள் நுண்கனியுப்பு கூட்டம்

(1) கல்சியம், நாகம்

(2) இரும்பு, நாகம்

(3) பொஸ்பரஸ், பொற்றாசியம்

(4) குளோரைட்டு, மக்னீசியம்

(5) கந்தகம் செப்பு

19) இறைச்சி, கோதுமை, அரிசி ஆகியவற்றில் காணப்படும் புரதம் முறையே

(1) சீன், இலக்கியூமின், கேசின்

(2) அல்புமின், குளூட்டன், அவிடின்

(3) கொலாஜன், கேசின், சீன்

(4) ஓரய்செயின், கேசின், கிளைக்கோஜன்

(5) மயோசின், குளூட்டன், ஓரய்செயின்

20) சூரியகாந்தி எண்ணெய் அமைந்த கொழுப்பமிலம்

(1) மிஸ்ரிக்கமிலம்

(2) பியூற்றிக்கமிலம்

(3) லினோலெயிக்கமிலம்

(4) லோரிக்கமிலம்

(5) ஒலோயிக்கமிலம்

21) ஆதவன் காலை உணவாக $100g$ பாணும் $25g$ பருப்புக்கறியும் $35g$ மாஜரின், முட்டை பொரியலும் நீரும் உட்கொண்டான். அவனுக்கு அவ்வேளையில் கிடைக்கக்கூடிய கலோரியளவு

(1) $815\ kcl$ (2) $1000\ kcl$ (3) $735\ kcl$ (4) $315\ kcl$ (5) $680\ kcl$

22) காபோவைதிரேற்றின் மூலக கட்டமைப்பில் ஐதரசனுக்கும், ஒட்சிசனுக்குமான செறிவு வீதம்

(1) $4:2$ (2) $1:2$ (3) $3:6$ (4) $5:3$ (5) $2:1$

23) நரம்பு நாளங்களைச் சுற்றி உள்ள மயலின் உறைகளின் ஆக்கத்துக்கு உதவும் $B$ தொகுதி விற்றமின்

(1) $B_1$ (2) $B_2$ (3) $B_{12}$ (4) $B_3$ (5) $B_6$

24) இன்சுலினின் ஒரு கூறாக தொழிற்படும் கனியுப்பு

(1) இரும்பு (2) அயடீன் (3) செலனியம்

(4) நாகம் (5) குளோரின்

25) உலர் உணவுப் பொருளை பொதி செய்யும் போது ஈரப்பற்றை உறிஞ்ச பயன்படுத்தும் பொருள்

(1) சிலிக்காஜெல் (2) சல்பைற்று (3) போமலின்

(4) ஐதரசன் ஒட்சைட் (5) கந்தகவீரொட்சைட்டு

26) திருமண நிகழ்வு ஒன்றுக்கு இலைக்கறிவகையை கொள்வனவு செய்த சமையற்காரர் அதனை கழுவுவதற்கு (தொற்று நீக்க) பயன்படுத்தப்படக்கூடிய பதார்த்தம்

(1) கல்சிய வில்லை

(2) குளோரின் வில்லை

(3) பனடோல் வில்லை

(4) கந்தக வில்லை

(5) விற்றமின் $D$ வில்லை

27) மாவையும், கொழுப்பையும் விரல் நுனிகளால் பிஸ்கட்தூள் போல வரை கலந்து தயாரிக்கும் பேஸ்ரி வகை

(1) பப்பேஸ்ரி (2) சூ பேஸ்ரி (3) சோக்கிரஸ்ட் பேஸ்ரி
(4) பற்றீஸ்பேஸ்ரி (5) பான்கேக்

28) சதையச் சாற்றில் காணப்படும் நொதியங்களுள் ஒன்று

(1) திரிச்சின் (2) ரெனின் (3) பெப்சின்
(4) மோல்ரோசு (5) குளுக்கோசு

29) காபோவைதரேற்று சமிபாட்டில் முன்சிறுகுடலில் நிகழும் மாற்றம்

(1) மாப்பொருள் எளிய வெல்லமாக மாற்றமடைதல்
(2) லக்லோஸ் குளுக்கோசாக உடைக்கப்படல்
(3) எளிய பல்சக்கரைட்டு இருசக்கரைட்டாக உடைக்கப்படல்
(4) கொழுப்பமிலம் கிளிசரோளாக மாற்றமடைதல்
(5) பெப்தைட்டு பெப்தோனாக மாற்றமடைதல்

30) புரத அனுசேபத்தில் அமினோ அமிலம் அமைனோ கூட்டமாகவும், காபொட்சில் கூட்டமாகவும் உடைக்கப்படுவது

(1) ஈரலில் (2) மண்ணீரல் (3) இரப்பை
(4) சதையி (5) முன்சிறுகுடல்

31) உணவு சமிபாட்டுச் செயன்முறையில் அதிகளவு நீர் மீள அகத்துறிஞ்சப்படுவது

(1) முன்சிறுகுடல் (2) சிறுகுடல் (3) இரைப்பை
(4) நேர்குடல் (5) பெருங்குடல்

32) உடலின் சிறந்த நிலைப்பாட்டிற்கு நீரின் பயன்பாடு பற்றிய தவறான கூற்று

(1) சமிபாட்டுக்கு உதவும்
(2) கலங்களின் உறுதிநிலை பேணாது
(3) உடல் வெப்பநிலை சீராக்கும்
(4) மல நீக்கத்துக்கு இலகு
(5) குருதி செறிவை நிலைநிறுத்தல்

33) நீண்டகால விற்றமின் *A* குறைபாடு காரணமாக குருட்டு நிலை ஏற்படும் இந்நிலையின் தீவிர தன்மையின் அறிகுறி அல்லாதது

(1) கண் உலர்தல்
(2) கண் வெளிறல்
(3) கண்ணீர் சுரப்பு தொழிற்பாடு குறைதல்
(4) பிற்றோவின் புள்ளி தோன்றல்
(5) கண்களில் புண் ஏற்படல்

34) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 4 வயது பிள்ளையில் கீழ்வரும் அறிகுறி காணப்பட்டது.

1) தேய்வடைந்த உடல்
2) வயோதிப தோற்றம்
3) தோல் உலர்ந்து சுருங்குதல்
4) வாந்தி, வயிற்றோட்டம்

இவ் அறிகுறி தென்படும் நோய்

(1) மரஸ்மஸ் (2) குவாசிக்கோர் (3) விற்றமின் குறைபாடு
(4) அயடீன் குறைபாடு (5) கல்சிய குறைபாடு

35) பச்சிளம் குழந்தை காட்டும் தெறிவினைச் செயல்களுள் அடங்காதது

(1) அழுதல்

(2) பால் உற்பத்தி குடித்தல்

(3) திடுக்கிடல்

(4) ஈர்த்தல்

(5) முகம் பார்த்து சிரித்தல்

36) குழந்தைக்கு 4 மாத முடிவில் வழங்கும் தடுப்பூசி

(1) முக்கூட்டு வக்சீன்

(2) B.C.G. வக்சீன்

(3) பென்டாவேலன்ட் வக்சீன்

(4) MMR வக்சீன்

(5) ஹபடைடீஸ் வக்சீன்

37) பச்சிளம் குழந்தை என்பது

(1) பிறந்தது முதல் நான்கு கிழமை வரை

(2) பிறந்தது முதல் ஆறு கிழமை வரை

(3) பிறந்தது முதல் இரண்டு நாட்கள் வரை

(4) பிறந்தது முதல் ஒரு வாரம் வரை

(5) பிறந்தது முதல் இரண்டு கிழமை வரை

38) பிணியாய் நிலையம் செல்லும் கர்ப்பிணித்தாய்க்கு, முதிர் மூலவுருவின் நரப்பு வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட வில்லை

(1) இரும்பு

(2) கல்சியம்

(3) விற்றமின் - C

(4) போலிக்கமிலம்

(5) அமொக்சிலின்

39) பின் பிள்ளை பருவத்திலும், கட்டிளம் பருவத்திலும் காணப்படக்கூடிய இயல்பு

(1) பகற்கனவு

(2) சுயநலம்

(3) முன்மாதிரி

(4) சுய இரக்கம்

(5) போலச் செய்தல்

40) தாய்ப்பால் உற்பத்தியையும், சுரத்தலையும் தூண்டும் ஓமோன்கள்

(1) ஈஸ்ரஜன், ஒக்சிரோசன்

(2) புரோலக்டின், புரோஜெஸ்ரரோன்

(3) புரோலக்ரின், ஈஸ்ரஜன்

(4) ஒக்சிரோசன், புரோலக்ரின்

(5) புரோஜெஸ்ரரோன், ஒக்சிரோசன்

41) தையலில் நுட்பம் பிரயோகிக்கும் இரண்டு சந்தர்ப்பங்கள்

(1) சேட்டின் திறப்புக்கு தெறியோட்டை தைத்தலும், கடிதம் தாங்கியின் விளிம்புமூடி தையல்

(2) சேலை இரவிக்கைக்கு கைவிளிம்பு, கழுத்து விளிம்பு தைத்தல்

(3) சேட்டின் கைக்கரையையும், கீழ் விளிம்பும் மடித்து தைத்தல்

(4) சட்டையின் உடம்புடன் கை பொருத்தல் கைவிளிம்பு தைத்தல்

(5) சேட்டின் யோக் தைத்தல் பொக்கற் தைத்தல்

42) பின்வரும் நாரில் எந்நாரை எரிக்கும் போது கடதாசி எரியும் மணம் உருவாகும்?

(1) பட்டு, ரேயோன்

(2) நைலோன், பட்டு

(3) பருத்தி, பட்டு

(4) நைலோன், இலினன்


(5) இலினன், ரெயோன்

43) வெட்டுக்குத்து தையல் தைக்க உகந்த துணி அல்லாதது

(1) எயர்டெக்ஸ் (2) ஜாவா (3) கன்வஸ்

(4) நென்சூக் (5) அய்டா

44)



**A**



**B**

மேலே தரப்பட்ட வரிப்படம் முறையே

(1) நூல் இழுத்தசோம், ஈயுருத்தையல்

(2) வெட்டுக்குத்து, அடுக்கு நாணயஉரு

(3) உருமேனியல், ஜேர்மன் முடிச்சு

(4) சிலந்திவலை, லேசிடேசி

(5) தனிச்சங்கிலி, நரம்பு

45) தைக்கும் போது ஊசியை சுற்றி பின்னும் வீதத்தில் தைப்பது

(1) சங்கிலித் தையல்

(2) நரம்புத் தையல்

(3) சிலந்திவலைத் தையல்

(4) ஈயுருத் தையல்

(5) அடுக்கு நாணயஉருத் தையல்

46) உடை தைப்பதற்கு நபர் ஒருவருக்கு அளவெடுக்கும் போது அணிய வேண்டிய உடை

(1) தளவான ஆடை

(2) இறுக்கமான ஆடை

(3) உருவக்கோட்டு ஆடை

(4) நீளக்கை ஆடை

(5) கட்டக்கை ஆடை

47) பெண்ணின் உடற்பகுதியில் முன்பக்க மார்புச் சுற்றளவு கணிக்கும் சரியான முறை

(1) $\frac{\text{மார்புச் சுற்றளவு}\ (cm)+5\ cm}{2} - 1.5 \div 2$

(2) $\frac{\text{மார்பளவு}}{4} - 1.5 \div 2$

(3) $\frac{\text{மார்புச் சுற்றளவு}\ (cm)+5\ cm}{2} + 1.5 \div 2$

(4) $\frac{\text{மார்பளவு}}{2} + 2$

(5) $\frac{\text{மார்பளவு} \div 2}{4} + 1.5 \div 2$

The National e-learning Portal for The General Education

48) நெசவு வகைகளுள் சரிவுக்கோட்டு நெசவும் ஒன்றாகும். அது 5 வகைப்படும். அவற்றுள் ஒன்று

(1) வைரச்சரிவு

(2) சற்றின்சரிவு

(3) பாவுவிலாசரிவு

(4) ஊடைவிலைசரிவு

(5) தேன்கூட்டுச்சரிவு

49) நீரின் நிலையற்ற வன்மையை ஏற்படுத்தும் ஓர் உப்பானது

(1) கல்சியம் காபனேற்று

(2) கல்சியம் குளோரைட்டு

(3) மக்னீசியம் இருகாபனேற்று

(4) சோடியம் குளோரைட்டு

(5) மக்னீசியம் நைதரேற்று

50) நீர் விநியோகத்துக்கு பயன்படும் குழாய்கள் ஆக்கப்பட்ட இரசாயனப் பொருள்

(1) வெள்ளிரும்பு

(2) நாகம்

(3) செம்பு

(4) பித்தளை

(5) பொலிவீனல்குளோரைட்டு

The National e-learning Portal for The General Education

FWC

# வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | மனைப்பொருளியல் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ **பகுதி I இல் முதலாம் வினாவுக்கும் வேறு இரண்டு வினாக்களும் உட்பட மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) மத்திய மலைநாட்டு பிரதேசத்தில் காமினி என்பவரது குடும்பம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டில் குடியேறியுள்ளார். அவ்வீட்டில் 3 படுக்கை அறையும் இணைந்த குளியலறை மலசலகூட வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. காமினி தொழில் செல்பவர். அவரது மனைவி தையலில் விசேட திறன் மிக்கவள். கழிவு துணி பயன்படுத்தி வீட்டு உபயோக பொருள் தைத்து விற்பனை செய்கிறாள். அவர்களுக்கு 15 வயது பெண் பிள்ளையும், 10 வயது ஆண் பிள்ளையும், வயதான தாயும் அவர்களுடன் வசிக்கிறாள். தனது வீட்டு தோட்டத்தை இயற்கை அழகுடன் தொழிற்பாட்டுடன் கூடியதாக பராமரித்து வருகிறாள்.

i) கலைவடிவமைப்பு கோட்பாட்டுக்கு ஏற்ப வீட்டுத் தோட்டத்தை அலங்கரிக்கும் 4 முறைகளைத் தருக.

ii) கழிவு துணி பயன்படுத்தி வீட்டு உபயோக பொருளான துணையணிகள் 3 கூறி அதில் பயன்படுத்தக்கூடிய அலங்கார தையல் வகைகள் நான்கையும் தருக.

iii) இவர்களது வீட்டு படுக்கை அறைக்கு உரிய தளபாட ஒழுங்குடன் உரிய குறியீடு பயன்படுத்தி தளத்திட்டம் வரைக.

iv) இவ்வீட்டின் வளமுகாமை தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டிய படிமுறைகள் எவை?

v) அவர்களது படுக்கையறை உயரம் குறைவாக காணப்படுகிறது. அதனை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை 4 தருக. (25 புள்ளி)

02) நார்வகைகளின் இயல்புகளை அறிந்திருத்தல் நார்களை இனங்காணும் போது முக்கியம் வாய்ந்தவையாகும்.

i) பருத்தி, கம்பளி நாரை இனங்காணும் பரிசோதனை முறைகள் இரண்டைத் தந்து, அதில் ஒரு முறையில் பருத்தி, கம்பளியின் இயல்பை விளக்குக.

ii) ஆடை ஒன்றை தைப்பதில் மேற்கொள்ளும் செயற்பாடு அத்துணியின் தரத்தைத் தீர்மானிக்கும். இதனை நியாயப்படுத்துக.

iii) வீட்டிற்கு திரைச்சீலை இடும்போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக.

iv) வீட்டை அலங்கரிப்பதற்காக திரைச்சீலை தொங்கவிடும் இரண்டு முறைகளை வரிப்படமாக காட்டுக. (20 புள்ளி)

03) வாழும் சூழலை சுகாதாரமான முறையில் பாதுகாக்க வீட்டுக் கழிவுகளை உரிய முறையில் அகற்றுவது முக்கியமாகும்.

i) வீட்டு மட்டத்தில் கழிவகற்றப்படும் முறைகள் எவை?

ii) வீட்டு கழிவுகளை (தாவர, விலங்கு, சமையல்) மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் முறை யாது? அதனை விபரிக்க.

iii) குடிநீரை வீட்டில் சுத்திகரிக்கக்கூடிய வழிமுறைகள் 3 ஐக் கூறி அதில் ஒன்றை விளக்குக.

iv) வீட்டுக் கழிவு நீரை அகற்றும் வழிகள் 4 தருக. (20 புள்ளி)

04) i) மனையின் உள்ளக அலங்கரிப்பில் பயன்படும் கலைத்துவ அடிப்படைகள் இரண்டைத் தந்து அவற்றில் ஒன்றை உதாரணத்துடன் விளக்குக.

ii) மனையமைப்பை மேற்கொள்ளும் போது கட்டடத்துடன் தொடர்புடைய சட்டரீதியான விடயங்கள் 4 தருக.

iii) மனைக்கு சீரான காற்றோட்டம் வழங்க கதவு யன்னல் போன்றன பயன்படுகின்றது. சீரான காற்றோட்டத்தால் மனையில் வசிப்போருக்கு கிடைக்கும் நன்மைகள் 4 தருக.

iv) மனை அலங்கரிப்பில் நிறப்பயன்பாடு முக்கியமான ஒன்றாகும். எதிர்நிற இசைவு என்பதனை ஆராய்க. (20 புள்ளி)

## பகுதி - II

❖ **பகுதி II இல் முதலாம் வினாவுக்கும் வேறு மூன்று வினாக்களும் உட்பட நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

05) பாடசாலையின் வருடாந்த கல்வி சுற்றுலாவில் தரம் 12, 13 மாணவரும் சென்றிருந்தனர். அவர்களை தொழிற்சாலை, உணவு பதனிடும் நிலையம், பிஸ்கட் உற்பத்தி மற்றும் சிறுவர் நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். இறுதியில் சுற்றுலா தொடர்பான அறிக்கை தயாரித்து ஒப்படைக்குமாறும் மாணவருக்கு கருத்து முன்வைக்கப்பட்டது.

i) பழங்களை பதனிடும் முறைகள் 3 கூறி அதில் ஒன்று செய்யும் முறையை கோட்டுப்படம் மூலம் தருக.

ii) உணவு உற்பத்தியில் பொதி செய்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. எனவே உணவுப் பொருளை பொதியிடும் போது வலியுறுத்த வேண்டிய விடயங்கள் 5 தருக.

iii) சிறுவர் நலன்புரி நிலையங்களின் செயற்பாட்டை மாணவர் அறிக்கைப்படுத்தியிருந்தனர். அதனடிப்படையில் மொழி விருத்தி செயற்பாடுகள் 4 முன்வைக்க.

iv) சுற்றுலா சென்ற மாணவர் குழுவில் தரம் 12, 13 மாணவரிடையே சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக கூறப்பட்டது. எனவே பாடசாலையில் கட்டிளம் பருவத்தை நல்வழிப்படுத்த மேற்கொள்ளும் செயற்பாடுகள் 4 கூறுக.

v) முன்பிள்ளை பருவ பிள்ளைக்கு உணவை திட்டமிடும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக. (25 புள்ளிகள்)

06) i) காபோவைதரேற்று சமிபாட்டு செயன்முறையை கோட்டுப்படம் மூலம் காட்டுக.

ii) காபோவைதரேற்று அனுசேபத்தில் உட்சேபத் தொழிற்பாடுகள் 4 தருக.

iii) நைதரசன் சமநிலை என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

iv) சமிபாட்டுத் தொகுதியில் நடைபெறும் தொழிற்பாடுகள் எவை? (20 புள்ளி)

07) i) இலங்கையில் காணப்படும் போசணைப் பிரச்சினையை குறைக்க தேசியமட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் 4 தருக.

ii) வயது முதிர்ந்த ஒருவரின் போசணைத் தேவைகளைக் காரணத்துடன் விளக்குக.

iii) முன் பிள்ளை பருவ பிள்ளைகளிடத்தில் பிரச்சனையான நடத்தையான

a) கோபாவேசம் b) விரல் சூப்புதல்

காரணம் என்ன? நிவர்த்தி நடவடிக்கை பற்றி ஆராய்க.

iv) கர்ப்பிணிப் பருவத்தினருக்கு குருதிச்சோகை நோயிகள் தாக்கம் அதிகமாக காணப்படுவதாக சுகாதார திணைக்கள தரவுகள் சுட்டிக் காட்டுகிறது. இதற்குரிய காரணத்தை விளக்குக. *(20 புள்ளி)*

08) i) ஓமோன் ஒன்றின் தொழிற்பாடின்மை காரணமாக ஏற்படக்கூடிய தொற்றா நோய் எது? அந்நோய் ஏற்படுவதற்கான இரு பிரதான காரணங்களை தருக.

ii) 64 வயதுடைய நபர் ஒருவருக்கு மலங்கழிப்பதில் சிரமம் ஏற்பட்டது. இதற்கான காரணங்கள் எவை?

iii) மலச்சிக்கலால் அவதியுறும் நபருக்கு மதிய உணவைத் திட்டமிடுக.

iv) மேற்குறித்த உணவு வேளையில் குறித்த ஈற்றுணவின் செய்முறையை விபரிக்க. *(20 புள்ளி)*

09) i) பின்வரும் நற்காப்பு செய்யப்பட்ட உணவில் பதப்படுத்த பயன்படுத்திய நற்காப்புப் பொருளை கூறி, அவை ஒவ்வொன்றும் நற்காப்பில் செயற்படும் தன்மை பற்றி விளக்குக.
கத்தரிக்காய் மோஜ்
மின்புளித்தீயல்

ii) பின்வருவனபற்றி விளக்குக.

a) உணவு சமைக்கும் போது நீரிலிட்டு அவித்தல்

b) உணவு சமைப்பதன் முக்கியத்துவம்

iii) தாவர உணவு உண்ணும் நபர் பருப்பு வகைகளை உணவுடன் அதிகம் சேர்ப்பதனால் பெறக்கூடிய நன்மைகள் எவை?

iv) a) உடற்திணிவுச் சுட்டி ($BMI$) என்பது யாது?

b) உடற்திணிவு சுட்டி பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக. *(20 புள்ளி)*

The National e-Learning Portal for The General Education